எதிரியை வெற்றிகொள்ளும் சக்கரம்

15	22	2	7
6	3	19	18
21	16	8	1
4	5	17	20

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. ஆறாவது வீட்டை நற்கோள் காணும் கோட்சாரத்தில் வழிபாடு இயற்றுவது நற்பலன் நல்கும். தனது சாரத்தில் மூன்றாவது வீட்டுக்கு நாயகனான கோள் வலிமை பெறுகிற நன்னாள் சிறப்புடையது.

ஈர்ப்பு அல்லது வசியம்

30	37	2	7
6	3	34	33
36	31	8	1
4	5	32	35

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. மூன்றாவது வீட்டை நற்கோள் காணுங் கோட் சாரத்தில் வழிபடல் நன்று. இந்த வழிபாட்டில் புனுகு, சந்தனம் முதலிய நறுமணப் பொருள் களுக்கு முக்கியம் தரப்படும்.

தேர்வுகள், போட்டிகள் போன்ற முயற்சிகளில் வெற்றி தரும் சக்கரம்

23	30	2	7
6	3	27	26
29	24	8	1
4	5	25	28

தாமிரத்தகடு அல்லது தங்கத்தகடு. மூன்று, பத்து, ஆறு ஆகிய வீடுகளில் நற்கோளின் பார்வை வீழ்கிற கோட்சாரம் நன்று.

வெற்றியும் புகழும் தருகிற பொதுச் சக்கரம்

24	31	2	7
6	3	28	27
30	25	8	1
4	5	26	29

தாமிரத் தகடு அல்லது தங்கத் தகடு. தனது விண்மீனுக்கு வலிமை தரக்கூடிய கோட்சாரத்தில் வழிபாடு இயற்றுவது நலம் தரும்.

இ) விண்கோட் சக்கரங்கள்

பின்னர் வருகிற ஏழு சக்கரங்களும் நான் நேரில் பழகியுள்ள சித்தர் மரபில் வந்த பெரியோர்கள், தங்களுடைய பயிற்சியிலும் பழக்கத்திலும் பயன் துய்த்துக் கண்ட சித்தர் முறையிலான மந்திர யந்திரங்கள் என்று சொல்லி வழங்கிய மதிப்பு மிகுந்த வழிபாட்டு இரகசியக் கருவூலங்கள். சித்தர்களின் வழிபாட்டு முறையிலே எண்களின் ஒலியாற்றலும் முக்கியம் பெறுகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்க பேருண்மையாகும்.

இந்த எண்களை இப்போது வழக்கத்தில் உள்ள 1, 2, 3, 4 என்ற முறையிலும் வரையலாம்; அல்லது தமிழ்க் குறியீட்டின்படி க, உ, ங, ச என்ற முறையிலும் வரையலாம்.

இந்த எண் சக்கரங்களை வழிபாடு செய்யும் முன்பு, அந்தந்தக் கோள்களின் உருவங்களை முறைப்படி வந்தித்து, அதன்பிறகு இந்தச் சக்கரங்களையும் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு விதி சொல்லப்பட்டுள்ளது.

இந்த உருவ வழிபாட்டுக்குத் தமிழகத்துக் கோயில்களிலே அமைந்துள்ள நவக்கோட் சன்னிதிகள் பொருத்தமான இடங்களாம். அந்தந்தச் சக்கரத்தை அவ்வவ் வுருவங்களின் பாதங்களில் வைத்து, முறையான பூசனைகள் செய்து, அதன் பின்னர் அவற்றை எடுத்துவந்து வீட்டில் வைத்து வழிபடலாம். உடம்பில் அணிந்துகொள்வதும் பயன்தரும்.

சூரியன்

4	14	15	1
9	7	6	12
5	11	10	8
16	2	3	13

தங்கத் தகடு; ஞாயிற்றுக் கிழமை; ஞாயிறு ஒரை. சூரியன் கோட்சாரத்தில் நன்னிலையில் நிற்கும் காலம்.

சந்திரன்

22	47	16	41	10	35	4
5	23	48	17	42	11	29
30	6	24	49	18	36	12
13	31	7	25	43	19	37
38	14	32	1	26	44	20
21	39	8	33	2	27	45
46	15	40	9	34	3	28

வெள்ளித் தகடு; திங்கட் கிழமை; சந்திர ஓரை. சந்திரன் கோட்சாரத்தில் வலிமையோடு நிற்கும் காலம்.

செவ்வாய்

37	78	29	70	21	62	13	54	5
6	38	79	30	71	22	63	14	46
47	7	39	80	31	72	23	55	15
16	48	8	40	81	32	64	24	56
57	17	49	9	41	73	33	65	25
26	58	18	50	1	42	74	34	66
67	27	59	10	51	2	43	75	35
36	68	19	60	11	52	3	44	76
77	28	69	20	61	12	53	4	45

இரும்புத் தகடு; செவ்வாய்க்கிழமை செவ்வாய் ஓரை. கோட்சாரத்தில் செவ்வாய் நன்னிலையில் நிற்கும் காலம்.

வியாழன்

4	9	2
3	5	7
8	1	6

வெள்ளித் தகட்டில் வரைந்துகொள்ள வேண்டும். வியாழக்கிழமை வியாழன் ஓரையில், கோட்சாரத்தில் வியாழன் நன்னிலையில் நிற்கும் காலத்தில் அணிந்து கொள்வது நலம் என்பது சித்தர் அறிவுரை.

சனி

8	58	59	5	4	62	63	1
9	15	51	52	53	54	10	16
48	18	22	44	45	19	23	41
25	39	35	29	28	38	34	32
33	31	27	37	36	30	26	40
24	42	46	20	21	43	47	17
49	55	14	13	12	11	50	56
64	2	6	60	61	3	7	57

ஈயத் தகட்டில் சனிக்கிழமை சனி ஓரையில் கோட்சாரத்தில் சனி நன்னிலையில் நிற்கும் காலத்தில் வரைந்து அணிந்து கொள்வது நலம் எனச் சித்தர்களின் அறிவுரை.

புதன்

11	24	7	20	3
4	12	25	8	16
17	5	13	21	9
10	18	1	14	22
23	6	19	2	15

பித்தளைத் தகடு: புதன்கிழமை; புதன் ஓரை. புதன் நன்னிலையில் கோட்சாரத்தில் நிற்கும் காலம்.

சுக்கிரன்

6	32	3	34	35	1
7	11	27	28	8	30
19	14	16	15	23	24
18	20	22	21	17	13
25	29	11	9	26	12
36	5	33	4	2	13

செப்புத் தகடு; வெள்ளிக்கிழமை, வெள்ளி ஓரையில். சுக்கிரன் கோட்சாரத்தில் நன்னிலையில் நிற்கும் காலம்.

ஈ. அணிகல யந்திரங்கள்

பதக்கம் அல்லது மோதிரத்துக்குரிய நவக்கோட் கற்களைப் பதிக்கும் முறை

பச்சை	வைரம்	முத்து
புட்ப ராகம்	மாணிக்கம்	பவளம்
வைடூரியம்	நீலம்	கோமேதகம்

தங்கத்திலே செய்து இரண்டாவது விரலாகிய மோதிர விரலில் அணிந்து கொள்ளலாம். பதக்கங் களாகவும் செய்து அணிந்துகொள்ளலாம்.

மோதிரச் சக்கரம்

சூரியன்

8	1	6
3	5	7
4	9	2

தங்கத்தில் இந்தச் சக்கரம் வரைந்த மோதிரத்தை, மோதிர விரலில் அணியவும். ஞாயிற்றுக் கிழமைகளில் தனது விண்மீனுக்கு வலிமை தருகிற நாளில் சூரிய ஓரையில் அணியவும்.

மோதிரச் சக்கரம்

சந்திரன்

7	2	9
8	6	4
3	10	5

வெள்ளியில் செய்து சுண்டுவிரலில் அணியவும். திங்கட்கிழமை, சந்திர ஓரை, விண்மீன் வலிமை பெற்ற நன்னாள்.